**காலநிலைக்கேற்ற துரித நீர்பாசன கமத்தொழில் செயற்திட்டம் - 2020**

-----------------------------------------------------------------------------------------------------

காலநிலைக்கேற்ற துரித நீர்பாசன கமத்தொழில் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையேயான 2019 ஏப்ரல் 11 ஆந் திகதிய 6346-LK இலக்க பண அளிப்பு மற்றும் நிதிசார் தகவல் கடிதம் மற்றும் நிதியளிப்பு உடன்படிக்கையின் 111 (ii) ஆம் உறுப்புரை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்தரைகளுதம் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் கமத்தொழில் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் சர்வதேச அபிவிருத்தி சங்கம் அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. தெரிவு செய்யப்பட்ட வறண்ட பிரதேசங்களில் சிறு பற்றுநிலக் கமத்தொழிலின் உற்பத்தி திறனையும் காலநிலை எழுச்சியையும் முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். செயற்திட்டத்தின் செயற்பாடுகளானது கமத்தொழில் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல், கமத்தொழிலுக்கான நீர் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் ஆகிய மூன்று பகுதிகளின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 25,200 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 140 மில்லியன் ஆக காணப்பட்டதுடன், அதில் ரூபா 22,500 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 125 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மீதமுள்ள தொகையான ரூபா 2,700 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொ 15 மில்லியன் இலங்கை அரசினாலும் நலனாளிகளினாலும் நிதியளிக்கப்படுவதாக எதிர்பார்க்கப்படுதின்றது.

செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2019 மே 07 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2024 யூன் 30 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபட்டவர்களை நான் தெரிவிக்கின்றேன

**2. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| இல | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 34 ஆம் பிரிவு | உரிய காலத்திலான மீளாய்வு மற்றும் மதிப்பீடு இயலச் செய்து இப் பிரிவின் பிரகாரம் முகாமைத்துவ தகவல் அமைப்பு (MIS) ஸ்தாபிக்கப்பட்டு பேணிச் செல்லப்பட வேண்டிய போதிலும், 2021 யூன் 30 ஆம் திகதி வரையிலும் அவ்வாறான அமைப்பொன்று செயற்திட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ தகவல் அமைப்பு (MIS) தொடர்பான ஆரம்ப கலந்தரையாடல் நடாத்தப்பட்டதுடன் வியாபித்திருக்கின்ற தொற்று நிலையின் காரணத்தினால் ஸ்தாபித்தல் தாமதமாகியது. 3 மாத காலத்தினுள் அமைப்பு ஸ்தாபிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதமின்றி முகாமைத்துவ தகவல் அமைப்பு ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதி அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட 2019 மார்ச் 15 திகதிய 01/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | செயற்திட்ட இயக்க குழு (PSC) இரு மாதங்களுக்கு ஒரு தடவை கூடுதல் வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டினுள் செயற்திட்டத்தின் இயக்க குழு கூட்டங்கள் ஏதும் நடத்தப்படவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. வியாபித்திருக்கின்ற தொற்று நோய் நிலை மற்றும் செயற்திட்டத்தின் கொந்தளிப்பான நிலை காரணத்தினால் செயற்திட்ட இயக்க குழு கூட்டம் ஏற்பாடு செய்வதற்கு முடியாது போனது. | சுற்றறிக்கையின் ஆலோசனைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் இயக்க குழு கூட்டம் உரிய காலத்தில் நடத்தப்படல் வேண்டும். |
| (இ) | பின்னிணைப்பு 2, செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 21 ஆம் உப பிரிவு | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம் மீளாய்வாண்டினுள் போதுமான உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. சில அபிவிருத்தி நடவடிக்கைகள் கமத்தொழில் அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவின் ஊடாக கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது. | குறித்த வரிசை அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவின் ஊடாகவே உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2016 மார்ச் 24 திகதிய 01/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2016 மார்ச் 24 திகதிய ஆம் இலக்க சுற்றறிக்கை ஊடாக பெற்றுக் கொடுக்கப்படுள்ள ஆலோசனைகளுக்கு முரணாக, அடிப்படை கல்வி மற்றும் தொழில்சார் தகுதி மற்றும் அனுபவம் பரிசோதிக்கப்படாது முழு நேர மற்றும் பகுதி நேர அளப்படையில் நான்கு நிபுணர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். | செயற்திட்டத்தினை சுமூகமாக நடத்திச் செல்வதற்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில், பெற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் கருத்திற் கொள்ளப்பட்டு மாகாண ரீதியான ஆட்சேர்ப்புக்கள் முதலாவதாக மேற்கொள்ளப்பட்டது.<br>நிலைமையினை தகுந்த முறையில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் போது குறைந்தபட்ச கல்வி மற்றும் தொழில்சார் தகுதிகளை போன்றே அனுபவமானது செயற்திட்ட முகாமைத்துவ அலகின் ஊடாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். |

## 03. பௌதீகச் செயலாற்றல்

### 3.1 செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை நிறைவு செய்வதிலான தாமதம்.

| இல | நடவடிக்கை | ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த திகதி | நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்ட திகதி | தாமதம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | ஹம்பந்தோட்டை மாவட்டத்தின் 04 கமநல சேவை மத்திய நிலையங்களின் நவீனமயப்படுத்தல் | 2020 பெப்ரவரி 27 ஆந் திகதி | 2020 திசெம்பர் 18 ஆந் திகதி | 06 மாதங்கள் | இரு கமநல சேவை மத்திய நிலையங்களின் (ASC) பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், முன்றாவதின் பணிகள் 95 சதவீதம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. செலுத்தப்பட்ட முற்பணமானது முழுமையான அறவிடப்பட்டது. நான்காம் பணியின் நிலையை செயற்திட்டம் மீளாய்வு செய்கின்றது. | செயற்திட்டத்தின் பணிகளை விரைவுப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ஆ) | முல்லைத்தீவு மாவட்டத்தின் 04 கமநல சேவை மத்திய நிலையங்களின் நவீனமயப்படுத்தல் | 2020 செப்தெம்பர் 14 ஆந் திகதி | 2021 யூலை 06 ஆந் திகதி | 06 மாதங்கள் | முல்லைத்தீவு பக்கேஜானது ஆண்டின் இறுதி காலண்டின் போதே வழங்கப்பட்டிருந்தது. தற்போது மூன்று கமநல சேவை மத்திய நிலையங்களின் (ASC) பணிகள் 50 சதவீதத்தினை பார்க்கிலும் அதிகமாக நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன், மற்றைய கமநல சேவை மத்திய நிலையத்தின் (ASC) பணி 25 சதவீதம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் பணிகளை விரைவுப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | அம்பாறை மாவட்டத்தின் 04 கமநல சேவை மத்திய நிலையங்களின் நவீனமயப்படுத்தல் | 2020 செப்தெம்பர் 23 ஆந் திகதி | 2021 யூலை 06 ஆந் திகதி | 01 மாதம் | அம்பாறை மாவட்டத்தின் அனைத்து கமநல மத்திய நிலையங்களினும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரு மத்திய நிலையங்களின் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் மற்றைய இரு மத்திய நிலையங்களின் பணிகள் 30 சதவீதம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் பணிகளை விரைவுப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 செயற்திட்டத்தின் வெளி நடவடிக்கைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| வருகையினை பதிவதற்கு வருகை பதிவேடொன்று பேணப்படாது மற்றும் செயற்திட்டத்தில் வேலை செய்த காலத்தினையும் பங்களிப்பினையும் மதிப்பிடாது, பகுதி நேர அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட 54 அரச மற்றும் அரை அரச உத்தியோகத்தர்களுக்கு மொத்தம் ரூபா 24 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | அனைத்து மாகாண அலகுகளிலும் வருகை பதிவேடு பேணிச் செல்லப்படுகின்றது. செயற்திட்ட முகாமைத்துவ அலகில் கைவிரல் அடையாளம் பதிவு செய்யப்பட்டதுடன் செயற்திட்ட முகாமைத்துவ அலகின் இடம் மாற்றப்பட்டதன் காரணத்தினால் அது தவறிவிட்டது. | வருகையை பதிவு செய்வதற்கு முறையான அமைப்பினை பேணல் வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் பிரதான பதவிகளான செயற்திட்ட பணிப்பாளர், நீர் முகாமைத்துவம் தொடர்பான பொறியியலாளர், செயற்பாட்டு முகாமைத்துவம், பெறுகை நிபுணர், நீரியலர் மற்றும் நீர்வள அபிவிருத்தி நிபுணர் போன்ற பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | பாதீட்டு சுற்றறிக்கை காரணத்தினால் முதற் காலக்கட்டத்தினுள் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படவில்லை. எவ்வாறாயினும், புதிய தெளிவுடன் வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் பிரதான பதவிகள் தாமதமின்றி நிரப்பப்படல் வேண்டும். |
| (ஆ) | 2009 ஏப்ரல் 16 திகதிய மற்றும் 2009 யூன் 17 திகதிய 09/2009 ஆம் இலக்க மற்றும் 09/2009 (1) ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் பிரகாரம் செயற்திட்ட முகாமைத்துவ அலகின் பதவியணியின் வருகையை பதிவு செய்வதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. கைவிரல் அடையாள இயந்திரத்தினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்ட முகாமைத்துவ அலகினால் கைவிரல் அடையாள இயந்திரம் தாமதமின்றி ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |